# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

தமிழை செம்மொழி ஆக்கிவிட்டோம் என்று தற்பெருமை பேசுகிறார்கள். இவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் தமிழ் ஆஸ்திக ஸம்ப்ரதாயத்தாலும் ஆரிய பாரம்பரியத்தாலும் புகையுண்டு கிடந்தது போலவும் இவர்கள் அதைக் காத்துக் கை தூக்கி விட்டது போலவும் ஒரு கருத்து அடிக்கடி வெளிப்படும். ஆனால் அது உண்மையா? ஆசார்ய ஹ்ருதயதம் 41 வது சூர்ணிகையில், தமிழ் மொழியைப் பற்றி பேசுகிறது. "செந்திறத்த தமிழ் என்கையாலே ஆகஸ்த்யமும் அநாதி" என்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் ஆசார்யர். செந்திறத்த தமிழ் என்ற திருநெடுந்தாண்டகச் சொற்றொடரை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இங்கே வெகு ஸாமர்த்யமாக கையாள்கிறார். செம்மொழி என்று நாம்கூறுமுன் செந்திறத்த தமிழ் என்று ஆழ்வாரும் நாயனாரும் கூறுகிறார்கள்.

இதன் கருத்தாழம் என்ன என்பதை சூர்ணிகையின் பின் பகுதியிலே பார்க்கிறோம். அகஸ்த்தியர் தமிழை உலகுக்கு பிரபலப் படுத்தினதால் அவர் பெயரால் தமிழை ஆகஸ்த்தியம் என்று வழங்கும் மரபு உண்டு. ரிஷிகள் சம்பந்தத்தால் வடமொழி உயர்ந்தது என்றால் தமிழ் மொழியும் அந்த வகையில் குறைந்ததில்லை என்று காட்ட, குறுமுனி அகத்தியருக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை விளக்க ஆகஸ்த்தியம் என்ற சொல்லை பயன் படுத்துகிறார். அதை விட சூர்ணிகையின் ஈற்றுப் பகுதியில் வரும் அநாதி என்ற சொல் தமிழின் அந்தஸ்த்தை மிகமிக உயரக் கொண்டு போய் விடுகிறது. ஆதி என்றால் தொடக்கம். அநாதி என்றால் தொடக்கமே இல்லாதது என்று பொருள் – இறைவனைப் போலே! "கல் தோன்றி மண்தோன்றா" என்று இவர்கள் கவிபாடும் முன் தமிழுக்கு உரிய நியாயமான சிறப்பை சுருக்கமாக அதே சமயம் அழுத்தமாகத் தெரிவிக்கிறார் நாயனார். இரண்டே இரண்டு சொற்களால். ஒன்று 'ஆகஸ்த்யம்' இன்னொன்று 'அநாதி' வடமொழிக்கு அநாதித்வம் ஒரு பெருமை என்றால் தென் மொழிக்கும் அது உண்டு என்கிறார். அதை வலியுறுத்த 42வது சூர்ணிகையில் 'வடமொழிமறை என்றது தென் மொழி மறையை நினைத்திறே' என்கிறார்.

வடக்கு என்று சொல்லும் போது தெற்கு என்று ஒரு திசை உண்டு என்று புரிந்து கொள்ளுகிறோம் அல்லவா? அது போல் வடமொழி வேதம் என்றால் தென்மொழி வேதம் என்று ஒன்று இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும் அல்லவா? என்பது அவர் கருத்து, தமிழைத் தாழ்த்த வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர் இப்படி எழுதுவாரா? தமிழ் மறை தந்த

திரு ஜோசப் அவர்கள் ஆற்றியுள்ள நூற்றுக்கணக்கான
சொற்பொழிவுகளின் ஒலி நாடாக்கள் மற்றும் குறுந்தகடுகள்
(cassets & CDs) மேற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

நம்மாழ்வாரைக் குறிக்கும் போது 47வது சூர்ணிகையில் "நால்வேதம் கண்ட புராண ரிஷி மந்த்ர தர்ஷிகளைப் போலே இவரையும் ரிஷி முனி கவி என்னும்", என்று கூறி நம்மாழ்வார் ஒரு வியாசருக்கோ, வசிஷ்டருக்கோ குறைந்தவர் அல்லர் என்கிறார். இப்படிக் கூறும் நாயனாரை விடவா நாம் தமிழனை உயர்த்தி விட முடியும்?

73வது சூர்ணிகையில் "ம்ருத்கடம் போலன்றே பொற்குடம்" என்று ஒரு முத்தாய்ப்பு வைக்கிறார். ம்ருத்கடம் என்பது மண்குடமாகும். பொற்குடம் என்பது தங்கக்குடம் ஆகும். இவர் மண்குடம் என்பது வடமொழியை. பொற் குடம் என்பது தமிழ் மொழியை. மண்குடத்தை எல்லாரும் தொடுவதில்லை. பொற்குடத்தை எல்லாரும் பக்தியோடு கையாள்வர். வடமொழி வேதத்தை வருண, அனுஷ்டான காரணங்களால் சிலர் மட்டுமே ஓதமுடியும். ஆனால் தமிழ் மொழியோ தடையின்றி அனைத்துப் பிரிவினர்க்கும் கையாளத் தகுதி உள்ளதாய் இருக்கும். அந்த வகையில் பார்த்தால் தமிழ் வேதம் வடமொழி வேதத்தை விட உயர்ந்தது என்கிறார்.

ஸ்ரீவைஷ்ணவக் கோயில்களில் பெருமாள் திருவீதிப் புறப்பாடு காணும் போது, தமிழ் வேதம் முன்னே செல்ல, தாமோதரன் அதன் பின்னே செல்வன். வாசுதேவன் பின்னால் தான் வடமொழி செல்லும். தமிழ் வேதம் சேவிப்பவர்கள் முன்னணியிலும், வடமொழி வேதம் சேவிப்பவர்கள் பின்னணியிலும் செல்வதை நாம் இன்றும் காணலாம். விஷ்ணு ஆலயங்களில் தமிழ் பாடிய ஆழ்வார்களுக்கு சன்னதியும், சத்காரமும் இருப்பது போல் வடிமொழி வேத ப்ரவர்த்தகர்கள் ஆன வசிஷ்டாதி ரிஷிகளுக்கு இருப்பதில்லை. வைணவம் அவ்வளவு தூரம் தமிழுக்கு முக்கியத்வம் கொடுக்கிறது.

வேத பாராயண பரம்பரையில் பிறந்தவர்கள் கூட ஆண்டாள் பாசுரங்களையும், மற்ற ஆழ்வார் பாசுரங்களையும் பொருள் உணர்ந்து சொல்வது போல கனபாடங்களைச் சொல்லுவார்களா என்பது சந்தேகமே. ராமாநுஜர், மணவாளமாமுனிகள் முதலிய ஆசார்ய பரம்பரையினர் மனிதக் குலத்துக்குச் செய்த ப்ரதான தொண்டு, வடமொழி விஷயமாக இருந்த வைகுண்டப் பெருமாளை நம் வாயில்படிக் கண்ணனாக ஆழ்வார்கள் எடுத்துக் காட்டி உள்ள சிறப்பை போதித்தது தான்! ஒரு 100 ஆண்டுகளுக்கு முன்னால் வரை 4000 பாசுரங்களும் மனப்பாடமாகத் தெரிந்த வைணவர்கள் பல்லாயிரக் கணக்கில் இருந்தார்கள். இன்றும் நூற்றுக்கணக்கானவர்கள் அப்படி இருக்கிறார்கள்.

ஆழ்வார்கள் வளர்த்த தமிழ் என்று தலைப்பிட்டுப் பேசினால் தமிழ் மொழி ஆழ்வார்களுடைய பிரயோகத்தினால் எத்தனை இடங்களில் மெருகு பெற்றிருக்கிறது என்பதை கணக்கில்லாமல் சொல்லிக் கொண்டே போகலாம். தமிழை வளர்க்க வேண்டும் என்று நினைக்கிற யாரும் வைணவத்தை வளர்க்க வேண்டும். அக நானூற்றிலும் புறநானூற்றிலும் இல்லாத ஆயிரம் பொருள் வளங்களை வைணவம் நமக்கெடுத்து தருகிறது.

91வது சூர்ணிகையில் நாயனால், தமிழ் மாமுனி திக்கு சரண்யம் என்கிறார். அதாவது வால்மீகி பகவான் போன்ற மகரிஷிகள் தமிழ் மா முனிவரான அகத்தியர் இருக்கும் திசை தமக்கு சரண்யம் என்றார்கள். அதன் காரணம் அவர் தமிழுக்கு இலக்கணம் வகுத்து தமிழில் உள்ள தத்துவக் கருத்துகளுக்கு ஒரு வடிகால் விட்டு, வேதம் புராணம் இதிகாசம் ஆகிய எங்கும் பரவி கிடக்கும் வைணவக் கருத்துக்கள் தமிழ் மூலம் பார் எங்கும் பரவ அவர் காரணமாய் இருந்ததால் தான்! தமிழறியா வட இந்தியரும், தெலுங்கரும் ஏன் வெள்ளையரும் கூட நாலாயிரப் பாசுரங்களை மனப்பாடமாகச் சொல்லுவதை இன்றும் நாம் காண்கிறோமே. இதெல்லாம் தமிழுக்கு வளர்ச்சியில்லையா? நாத்திகம் பேசி ஆத்திகத்தை தாக்கினால் தான் தமிழ் வளருமா?